பக்கங்கள் 12

# மாலை முரசு

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 ஆடி 26 வெள்ளிக்கிழமை 11.08.2023 அதிர்வு 11

## வீட்டில் ஏற்பட்ட தீயில் இளம் தம்பதிகள் சாவு

இந்தப் பரிதாப சம்பவம் கம்பஹா – அத்தனகல்ல பிரதேசத்தில் நேற்று மாலை 6.30 மணியளவில் இடம் பெற்றுள்ளது.

04▶

### தமிழர்களுக்குத் தலையையும் சிங்களவர்களுக்கு வாலையும் காட்டும்

# ரணிலின் விலாங்கு தந்திரம்!




### ஐங்கரநேசன் சாட்டை



யாழ்ப்பாணம்,ஓகஸ்ட்11

அரசமைப்பின் 13 ஆவது திருத் தத்தை நாசூக்காக நாடாளுமன்றத் துக்குக் கொண்டு சென்றதன் தமிழர் களுக்குத் தலையையும் சிங்களவர் களுக்கு வாலையும் காட்டுகின்ற தனது விலாங்குத் தந்திரத்தை வெளிப்படுத்தி யிருக்கின்றார் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.

04▶



## நல்லூர் கண்காணிப்பில் இம்முறை 50 கமராக்கள்

### ட்ரோன்கள் பறக்கவும், பொலித்தீன் பாவனைக்கும் தடை

- எஸ்.நிதர்ஷன்-

வரலாற்று பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த திருவிழா தொடர்பான முன்னாயத்த இரண்டா வது ஏற்பாட்டு கூட்டம் இன்று யாழ் மாநகர சபையில் நடை பெற்றது.

05▶

## மலையக எம்.பிக்களை ரணில் அடுத்த வாரத்தில் சந்திப்பார்

### மனோ கணேசன் தெரிவிப்பு



முன்கூட்டியே நுவரெலியாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொது நிகழ்வில் கலந்–துக்கொள்ள செல்கின்ற கூட்டணி எம்.பிக்கள்

05▶

## “டைனமைற்“ மீன்பிடிப்புக்கு நிரந்தர ஆப்பு!

### அமைச்சர் டக்ளஸ் உறுதி



டைனமைற் பயன்படுத்தி மீன் பிடிப்பதை நிறுத்து வதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

04▶

## கொழும்பில் இளைஞன் விழுந்து சாவு

வெள்ளவத்தை பிரட்ரிக்கா வீதி யில் உள்ள எட்டு மாடி கட்டடத் தில் இருந்து தவறி விழுந்த 24 வயதுடைய இளைஞர் நேற்று உயிரிழந்துள்ளார்.

05▶



## கச்சதீவை இலங்கைக்கு தாரை வார்த்தவர்கள் யார்?

### தி.மு.கவிடம் மோடி கேள்வி

கச்சதீவை 1974ஆம் ஆண்டு இலங்கைக்கு இந்திரா காந்தி அரசுதான் வழங்கியது என்று பிரதமர் நரேந்திர மோடி நேற்று கூறினார்.

தமக்கு எதிரான நம்பிக்கை இல்லாப் பிரேரணை மீதான விவாதத்துக்குப் பதில் அளித்து பேசிய போதே இந்திய பிரதமர் நரேந்திர மோடி இவ்வாறு குறிப் பிட்டு தி.மு.கவைக் கடுமையாக

05▶

### குழந்தையின் உடல் பாகம் மீட்பு:

## யாழ். மாநகர ஆணையாளர் உட்பட 3 அதிகாரிகளுக்கு அழைப்பாணை

யாழ்ப்பாணம்ஆறுகால்மடபகுதியில் சிதைவடைந்த நிலையில் குழந்தை யின் சடலம் மீட்கப்பட்ட சம்பவம் தொடர்பிலான விசாரணைகளுக்காக யாழ்.நீதவான் நீதிமன்றில் எதிர்வரும் 16ஆம் திகதி முன்னிலையாகுமாறு யாழ்.மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட மூவருக்குக் கட்டளை

04▶





# கந்தபுரம் வாணி வித்தியாலய மாணவர்களுக்கு இணைந்த கரங்களின் கற்றல் உபகரணங்கள்!

**நூருல் ஹுதா உமர்**

வவுனியா கல்வி வலயத்திற்குட்பட்ட கந்தபுரம் வாணி வித்தியாலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று பாடசாலை மண்டபத்தில் இடம்பெற்றது.

இப்பாடசாலையின் அதிபர் ச. சண்முகரத்தினம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பாடசாலை பகுதித் தலைவர், ஆசிரியர்கள் ஆகியோருடன, இணைந்த கரங்கள் அமைப்பின் இணைப்பாளர்களான பெ.விவேகானந்தன், கோ.சிவானந்தன் ஆகியோர் கலந்துகொண்டு பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள், பாதணிகள் என்பவற்றை வழங்கினர்.








# இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவி பயிற்சி பட்டறை



**(நூருல் ஹுதா உமர்)**

மனித மேம்பாட்டு அமைப்பு ஸ்ரீ லங்கா மற்றும் வை.எம்.எம்.ஏ. மாவடிப்பள்ளி கிளையின் ஏற்பாட்டிலும் டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தின் ஒருங்கிணைப்பிலும் இளைஞர் யுவதிகளுக்கு முதலுதவி பயிற்சி பட்டறை ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

புனித சென்.ஜோன்ஸ் அம்பாறை மாவட்ட அலுவலகத்தில் மனித மேம்பாட்டு அமைப்பின் பணிப்பாளரும், சென் ஜோன்ஸ் படைப்பிரிவின் கல்முனை கோட்டத்தின் அத்தியட்சகருமான எஸ்.ஏ. முஹம்மட் அஸ்லம் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட சென் ஜோன்ஸ் படைப்பிரிவின் ஆணையர் கெப்டன். எம்.டி. நௌசாத், டைடன் ஆசியன் கல்வி நிறுவனத்தின் பணிப்பாளர் என். கோகுலதாசன், நிறுவனத்தின் தலைவர் ஏ.ஆர்.எம்.சர்ஜுன், தலைமை நிர்வாக அதிகாரி எ.எ.எ. அப்(f)ரி, சென் ஜோன்ஸ் படைப்பிரிவின் சம்மாந்துறை கோட்டத்தின் அத்தியட்சகர் எம்.ஆர்.ஹுசைன் என பலர் கலந்து கொண்டனர்.

# தேசிய மட்டத்துக்கு தகுதி; உயரம்பாய்தலில் சாதனை




**நூருல் ஹுதா உமர்**

12 வயதுக்குட்பட்ட பெண்களுக்கான உயரம் பாய்தல் போட்டியில், மாளிகைக்காடு கமு/கமு/ சபீனா முஸ்லிம் வித்தியாலய மாணவி தேசிய மட்டத்துக்குத் தெரிவாகியுள்ளார்.

இந்தப் பாடசாலையின் மாணவியான பாத்திமா சுல்பரே, தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகி சாதனை படைத்துள்ளார்.

இப்பாடசாலை வரலாற்றில் தேசிய மட்ட விளையாட்டுப்போட்டிக்கு தகுதிபெறுவது இதுவே முதல் தடவை என்பது குறிப்பிடத்தக்கது.



# பிரான்ஸ் 'வென்மேரி' அறக்கட்டளையின் ஆளுமை விருதுகள் வழங்கும் நிகழ்வு



பிரான்ஸில் நடைபெற்ற 'வென்மேரி' அறக்கட்டளை நிறுவனத்தின் 2 ஆவது ஆண்டு ஆளுமை விருதுகள் வழங்கும் நிகழ்வு ஞாயிற்றுக்கிழமை பிரான்ஸ் நாட்டின் பாரிஸ் மாநகரில் அமைந்துள்ள மண்டபம் ஒன்றில் இடம்பெற்றது.

தாயகத்தைத் தளமாகக் கொண்ட 'வென்மேரி' அறக்கட்டளை நிறுவனத்தின் நிறுவுனரும் கனடா வாழ் கவிஞருமான அனுரா வெனிஸ்லஸ் தனது நண்பர்கள் மற்றும் சகோதர சகோதரிகள் ஆகியோரோடு இணைந்து இந்த விருதுகள் வழங்கும் விழாவுக்கு ஏற்பாடுகளைச் செய்திருந்தார்.

அறக்கட்டளை அமைப்பின் தலைவரும் முன்னாள் யாழ்ப்பாண பல்கலைக் கழகப் பேராசிரியருமான கலாநிதி சிவலிங்கராஜா தாயகத்திலிருந்து தனது தலைமை உரையையும் வாழ்த்துச் செய்தியையும் இணைய வழியாக சமர்ப்பித்தார்.

உலகின் பல நாடுகளிலும் வாழ்ந்து வரும் ஈழத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆளுமைகள் இருபது பேர் இந்த விழாவில் கௌரவிக்கப்பெற்றனர். ஒவ்வொரு துறைகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றியாளர்கள் இதில் கலந்து கொண்டனர்.

கனடாவிலிருந்து பேராசிரியர் இ.பாலசுந்தரம் இலக்கியத்துறை சார்ந்த பணிகளுக்கும், 'கனடா உதயன்' பத்திரிகையின் ஆசிரியரும், கவிஞரும், எழுத்தாளருமான ஆர்.என். லோகேந்திரலிங்கம் ஊடகத்துறைக்காகவும் விருதுகள் தேர்வுக் குழுவினரால் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

இதே போன்று பரதநாட்டியம். நாடகம். படைப்பிலக்கியம், விளையாட்டு, நாட்டுக் கூத்து, வைத்தியச் சேவை. சமூகசேவை என பல துறைகள் சார்ந்த ஆளுமைகள் அங்கு மேடையில் கௌரவிக்கப்பட்டனர்.



# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**'டைனமற்'...**

கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவிப்பு

தடை செய்யப்பட்ட கடற்றொழில் முறைகளில் ஒன்றான டைனமைற் மற்றும் வெடிப்பொருள்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் கடற்றொழிலைத் தடுப்பதற்கு அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா நேற்றுத் தமது அமைச்சின் கேட்போர்கூடத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

ஜெல் வோட்டர் (டைனமைற்) பயன்படுத்தி மீன்களை பிடிப்பதால் ஏராளமான மீன் வளங்கள் அழிவடைகின்றன. இதனைத் தடுப்பதற்கு துரித நடவடிக்கைகள் எடுக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எனக்கு ஆலோசனை வழங்கியிருக்கின்றார். அதன் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இக்கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்த அமைச்சர், இவ்விடயம் தொடர்பில் அமைச்சரவைக்கு அறிவிப்பதற்காக அமைச்சரவை பத்திரமொன்றை தயாரிக்குமாறும் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் இந்து ரத்நாயக்க உள்ளிட்ட அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

டைனமைற் பயன்படுத்தப்படுவதனால் திருகோணமலை, கற்பிட்டி, மன்னார் மற்றும் தென்பகுதியிலும் கடல் வளம் அழிக்கப்படுவதாக சுட்டிக்காட்டிய அமைச்சர், இவ்விடயம் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சு மற்றும் மாவட்ட செயலாளர்களுக்கு அறிவிக்குமாறும் தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர், டைனமைற் பயன்படுத்துவோருக்கான விநியோக மார்க்கங்களைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய வழிமுறைகள் தொடர்பில் தமக்கு அறிவிக்குமாறும், இதனைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய சுற்றிவளைப்புகள் தொடர்பில் கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு அதிகாரிகளுக்கு உரிய ஆலோசனை வழங்குமாறும் அவர் தெரிவித்தார்.

இதற்கான உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதற்காக கடற்றொழில் சட்டமூலம் மற்றும் சுடுகலங்கள், வெடிபொருள்கள் தடுப்புக் கட்டளை சட்டத்தின் கீழ் உரிய நடவடிக்கை மேற்கொள்ள முடியும் எனவும் இந்தச் சட்டங்களில் இதனைத் தடுப்பதற்கான வழிமுறைகள் இல்லாவிடில் புதிய சட்டமூலங்களை தயாரிக்க முடியும் எனவும் அவர் கூறினார்.

டைனமைற் பயன்படுத்துவதால் அழிவடையும் மீன்களை இனங்காண்பதற்கு நாரா நிறுவனத்தில் போதுமான அதிகாரிகள் இல்லையெனில் சுற்றிவளைப்புகளில் ஈடுபடும் கடற்றொழில் திணைக்களத்தின் பிராந்திய அதிகாரிகளுக்கு அறிவித்து இம்மீன்களை இனங்காண்பதற்கான திட்டங்களை வகுக்குமாறும் அதற்குரிய நிதியை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறும் அதிகாரிகளுக்கு அவர் ஆலோசனை வழங்கினார்.

இக்கலந்துரையாடலில் கடற்றொழில் அமைச்சின் செயலாளர் திருமதி இந்து ரத்நாயக்க, கடற்றொழில் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த, அமைச்சின் மேலதிக செயலாளர் தம்மிக ரணதுங்க, பொலிஸ் திணைக்கள சுற்றாடல் பிரிவுப் பொறுப்பதிகாரி, கடற்படை மற்றும் சிவில் பாதுகாப்பு துறைகளின் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

---

**குழந்தையின்...**

வழங்கப்பட்டுள்ளது.

ஆறுகால்மடம் , கோம்பயன்மணல் மயானத்திற்கு அருகில் உள்ள காணி ஒன்றினுள் இருந்து நேற்றைய தினம் வியாழக்கிழமை சிதைவடைந்த நிலையில் குழந்தை ஒன்றின் சடலம் மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாண பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ள நிலையில், நேற்றைய தினம் யாழ். நீதிவான் மற்றும் யாழ்.போதனா வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி உள்ளிட்டோர் சம்பவ இடத்திற்கு நேரில் சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன் போது போதனா வைத்தியசாலையில் உரிமை கோரப்படாத சடலங்கள், சத்திர சிகிச்சையின் போது அகற்றப்படும் உடல் உறுப்புக்கள் என்பவை மாநகர சபை ஊடாக கோம்பயன் மணல் மயானத்திலேயே புதைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவ்வாறு புதைக்கப்படுவதை மாநகர சபை பணியாளர்கள் உரிய முறையில் செய்வதில்லை, அதனால் நாய்கள் உள்ளிட்ட விலங்குகள் அவற்றை இழுத்து செல்கின்றன, அதனால் அப்பகுதியில் துர்நாற்றம் வீசுகிறது, அப்பகுதி மக்கள் பல அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்துள்ளனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்நிலையிலையே, யாழ்.மாநகர சபை ஆணையாளர், அப்பகுதிக்கான பொது சுகாதார பரிசோதகர் மற்றும் கோம்பயன்மணல் மயானத்திற்கு பொறுப்பான உத்தியோகஸ்தர் ஆகிய மூவரையும் எதிர்வரும் 16ஆம் திகதி மன்றில் முன்னிலையாகுமாறு நீதவான் கட்டளையிட்டுள்ளார்.

---

**வீட்டில்...**

மினுவாங்கொடைப் பிரதேசத்தைச் சேர்ந்த 29, 27 வயதுடைய தம்பதியினரே இந்தச் சம்பவத்தில் உயிரிழந்துள்ளனர்.

அத்தனகல்ல பிரதேசத்தில் தனியார் நிறுவனங்களில் பணியாற்றும் இருவரும் அந்தப் பிரதேசத்தில் வாடகை வீடொன்றில் தங்கியிருந்த வேளையிலேயே தீ விபத்தில் சிக்கியுள்ளனர்.

மனைவி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் . கடும் தீக்காயங்களுடன் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்ட கணவன் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் பொலிஸார், தீ விபத்து ஏற்பட்டமைக்கான காரணங்கள் இன்னமும் கண்டறியப்படவில்லை என்று தெரிவித்துள்ளனர்.

---

**ரணிலின்...**

- இப்படி சாட்டையடி கொடுக்கும் கருத்தை வெளியிட்டிருக்கின்றார் பொ. ஐங்கரநேசன்.

ஜனாதிபதியாகத் தாம் கொண்டிருக்கும் நிறைவேற்று அதிகாரத்தைப் பயன்படுத்தி அரசமைப்பில் இருக்கும் 13ஆவது திருத்தச் சட்டத்தை ரணில் விக்கிரமசிங்க ஏற்கனவே நடைமுறைக்குக் கொண்டுவந்திருக்க முடியும். ஆனால், மிகவும் நாசூக்காக நாடாளுமன்றத்துக்கு அதனைக் கொண்டு சென்றிருக்கின்றமையோடு 13 தொடர்பாக தமிழர் தரப்புக்குச் சாதகம் போலக் காட்டும் சில பரிந்துரைகளையும் முன்வைத்திருக்கிறார். ஆனால் இப்பரிந்துரைகள் எவற்றையும் சிங்களவர்களை மிகப்பெரும்பான்மையாக உள்ள நாடாளுமன்றில் நிறைவேற்ற முடியாது என்று தெரிந்திருந்தும் நாடாளுமன்றத்துக்கு அவர் கொண்டு சென்றிருக்கின்றமை தமிழர்களுக்குத் தலையையும் சிங்களவர்களுக்கு வாலையும் காட்டுகின்ற அவரின் விலாங்குத் தந்திரமே ஆகும் என்று தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் 13ஆவது திருத்தச் சட்டத்தில் மாற்றங்கள் செய்வது பற்றி ஆலோசனைகளைச் சமர்ப்பித்திருப்பது தொடர்பாக பொ. ஐங்கரநேசன் வெளியிட்டிருக்கும் ஊடக அறிக்கையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

அந்த ஊடக அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்திருப்பவை வருமாறு:-

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மாகாணசபைச் சட்டங்களில் உடனடியாகச் சில மாற்றங்களைச் செய்து விரைவில் மாகாணசபைத் தேர்தலை நடாத்தவுள்ளார் என்ற தோற்றத்தைத் தனது நாடாளுமன்ற உரையின்போது வெளிப்படுத்தியிருக்கிறார். மாகாணசபைச் சட்டம் நடைமுறைக்கு வருவதோ, மாகாணசபைத் தேர்தல் நடைபெறப் போவதோ உடனடிச் சாத்தியம் இல்லாதவை. உள்ளூராட்சித் தேர்தலையே நடாத்தவிடாமல், வேட்புமனுத் தாக்கல் செய்த பின்பும் பல தந்திரங்களைச் செய்து தேர்தலைக் காலவரையின்றி ஒத்திப்போட்ட ரணில் விக்கிரமசிங்க, மாகாணசபைத் தேர்தலை நடாத்துவார் என்று எதிர்பார்ப்பது அரசியல் அறிவிலித்தனம்.

மாகாணசபைச் சட்டங்களில் திருத்தங்கள் செய்து, தமிழ்மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்வார் என்று நினைப்பது அதைவிட அறிவிலித்தனமானது.

ரணில் விக்கிரமசிங்க மாகாணசபை விவகாரத்தைக் கையிலெடுத்திருப்பதன் முதலாவது நோக்கம் மாகாணசபைத் தேர்தலை நடாத்துமாறு கோரும் இந்தியாவின் அழுத்தங்களில் இருந்து விடுபடுவதாகும். இரண்டாவது நோக்கம், ஜனாதிபதித் தேர்தலை முன்கூட்டியே நடாத்தி அறுதிப் பெரும்பான்மையுடன் தான் ஜனாதிபதியாக நீடிப்பதை உறுதி செய்வதாகும். ரணில் தீர்வு தருவார் என்ற நம்பிக்கையைத் தமிழ்மக்களிடையே ஏற்படுத்தி அவர்களின் வாக்குகளைக் கபளீகரிப்பதும், மாகாணசபை விவகாரத்தைப் நாடாளுமன்றத்துக்குக் கொண்டு சென்று அதனை நிறைவேற்ற முடியாமல் செய்வதன் மூலம் சிங்கள மக்களினது வாக்குகளை வாரிச் சுருட்டுவதுமே அவரது இலக்குகளாகும்.

தமிழ் மக்கள் ரணில் விக்கிரமசிங்கவின் இந்த விலாங்குத்தனத்தைப் புரிந்துகொள்ள வேண்டும். - என்றும் குறிப்பிட்டுள்ளார்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

**நல்லூர் கண்காணிப்பில்...**

ஏற்கனவே நடைபெற்ற முதலாவது முன்னாயத்த குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்ட விடயங்கள் தொடர்பிலும் அதனை நடைமுறைப் படுத்துவது தொடர்பிலும் இன்றைய தினமும் மீளவும் கலந்துரையாடி சில கட்டுப்பாடுகள் தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்பட்டமையுடன் பொதுமக்களுக்கும் அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

இக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் மற்றும் அறிவுறுத்தல்கள் தொடர்பில் யாழ் மாநகர ஆணையாளர் த. ஜெயசீலன் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் கூறியவை வருமாறு:-

நல்லூர்க் கந்தன் ஆலய திருவிழா இன்னும் சில தினங்களில் நடைபெறவுள்ள நிலையில் இம்முறையும் வழமை போன்று மாநகர சபை தனது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளது.

எதிர்வரும் 21 ஆம் திகதி கொடியேறத்துடன் திருவிழா ஆரம்பமாகவுள்ள நிலையில் அதற்கு முன்னேற்பாடாக 19 ஆம் திகதியே வீதித் தடைகள் போடப்பட இருக்கின்றன. அந்த வீதித் தடைகளிலே வழமை போன்று பொலிஸாரும் மாநகர சபை பணியாளர்களும் இருப்பார்கள்.

இந்த வீதித் தடை காலப்பகுதியில் குறிப்பாக பருத்தித்துறை வீதியால் பயணிக்கின்ற வாகனங்களுக்கு மாற்று வழிப் பாதை ஒழுங்குகள் கடந்த ஆண்டுகள் போலவே இம்முறையும் செய்யப்பட்டிருக்கின்றன.

இந்த உற்சவ காலத்திலே யாழ் மாநகர சபையின் உற்சவ கால பணிமனை 24 மணி நேரமும் செயற்பட இருக்கின்றது. இந்தப் பணிமனையின் ஊடாகவே சகல பணிகளையும் மாநகர சபையால் நாங்கள் முன்னெடுக்க இருக்கின்றோம்.

இந்தத் திருவிழா உற்சவ காலத்திலேயே ஆசார சீலர்களாக கலாச்சார உடைகளை அணிந்து பக்தி பூர்வமாக ஆலயத்திற்கு சமுகமளிக்க வேண்டும் என்று அன்போடு அனைவரையும் கேட்டுக் கொள்கின்றோம்.

அத்தோடு தங்களது உடைமைகளை பாதுகாப்பதிலேயே தாங்கள் கூடிய கவனத்தை செலுத்த வேண்டும்.

ஆலய சூழலிலே உரிய முறையில் பக்தர்கள், அடியார்கள் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுக்க வேண்டும் என்றும் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்கின்றோம்.

குறிப்பாக ஆலய வெளிவீதியில் சிவப்பு - வெள்ளைக் கொடிகள் கட்டப்பட்ட பகுதிகளில் அனைவரும் பாதணிகளைத் தவிர்த்து நடமாட வேண்டும் என்பதையும் அப்பகுதிகளில் வர்த்தக விளம்பர, வியாபார நடவடிக்கைகள் அனைத்தும் தடை செய்யப்பட்டு இருக்கின்றன என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

வழமை போன்று இம்முறையும் பாதுகாப்பு கடமைகளில் கணிசமான எண்ணிக்கை பொலிஸார் ஈடுபடுத்தப்பட இருக்கின்றார்கள். ஆரம்ப உற்சவ காலங்களில் குறிப்பிட்ட எண்ணிக்கை பொலிஸார் கடமையில் ஈடுபடுகின்ற அதே நேரம் விசேட திருவிழா காலங்களில் சற்று அதிக எண்ணிக்கையில் பொலிஸார் கடமைகளில் ஈடுபடுத்தப்படுவர்.

அதேபோன்று இந்த விசேட திருவிழா நாள்களிலே - குறிப்பாக சப்பரம், தீர்த்தம் போன்ற விசேட திருவிழா காலங்களில் - நாம் விசேட சில ஒழுங்குகளையும் மேற்கொண்டு இருக்கின்றோம்.

குறிப்பாக தூக்கு காவடிகள் அனைத்தும் அது எந்த பகுதியில் இருந்து வந்தாலும் பருத்தத்துறை வீதியால் வந்து, அந்த வீதியில் அமைக்கப்பட்டுள்ள ஸ்ரீமுருகன் தண்ணீர் பந்தல் இடத்தில் இறங்கி செட்டித்தெரு வீதியினூடாக வெளியேறுவதற்குரிய ஒழுங்குகளை செய்திருக்கின்றோம்.

இதேபோல இந்த உற்சவ காலத்திலேயே ஆலய வளாகத்தில் ட்ரோன் கமராக்கள் பயன்படுத்துவதை முற்றாகத் தடை செய்திருக்கிறோம்.

அதேபோலவே இந்த உற்சவ காலத்தில் ஆலய வளாகத்திற்கு ஆலய சூழலில் பொலித்தீன் பாவனையை முற்றாகத் தடை செய்திருக்கிறோம்.

அதேபோல சிறுவர்களைப் பயன்படுத்தி வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுவதை கண்காணிக்கிற செயல்பாடுகளை மேற்கொள்ளுவோம். இதனைத் தடுப்பதற்குரிய நடவடிக்கைகளையும் நாம் மேற்கொள்ள இருக்கின்றோம்.

ஆலய சூழலில் வர்த்தக வியாபாரம் நடவடிக்கைகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளதுடன் ஆலய பின்புற சூழலில் அந்த வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட முடியும். அதே நேரம் மாநகர சபை கடைகளை உரிய நடைமுறைகளை பின்பற்றிய நாங்கள் அவற்றை வழங்கி இருக்கின்றோம்.

இந்தத் திருவிழா காலத்திலேயே பெருந்தொகையான பக்தர்கள் - குறிப்பாக உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இருந்து - வருவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

அவர்களுக்குரிய அடிப்படை வசதிகளை உரிய முறையில் மேற்கொள்வதற்கு மாநகர சபையின் பிரிவுகள் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன.

சென்ற வருடம் போல வாகன பாதுகாப்பு நிலையங்களுக்கு உத்தியோக பூர்வமாக அனைவருக்கும் ஒரே கட்டணங்களைத்தான் இந்த முறையும் ஏற்பாடு செய்ய இருக்கின்றோம். அதனையும் மீறி மேலதிகமான கட்டணங்கள் அறவிடுவதாக எமக்கு முறைப்பாடு கிடைத்தால் அதற்கு எதிராக உரிய நடவடிக்கைகளை நாம் எடுப்போம்.

அதேபோன்று கடந்த வருடங்கள் போன்ற இம்முறையும் ஆலய சூழலில் நடக்கின்ற விடயங்களை கண்காணிப்பதற்காக நாம் 50 வரையிலான கண்காணிப்பு கமராக்களை பொருத்த இருக்கின்றோம். அந்த கமராக்களின் மையமாக நமது மாநகர சபையின் உற்சவ கால பணிமனை இயங்க இருக்கின்றது

யாழ் மண்ணில் இருந்தும் வேறு மாவட்டங்களிலிருந்தும் புலம்பெயர் தேசங்களில் இருந்தும் பெருமாளவிலான பக்தர்கள் இம்முறை திருவிழாவிற்கு வருவார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

எனவே அவர்கள் தங்களது உடைமைகள் - குறிப்பாக நகைகள் போன்றவற்றில் - கூடிய அளவு கவனத்தைச் செலுத்துவது அவசியம்.- என்றார்.

---

**மலையக...**

கொழும்பில் இருக்க போவதில்லை என்பதால், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று வெள்ளிக்கிழமை கொழும்பில் நடைபெறுவதாக சொல்லப்பட்ட கலந்துரையாடலில் கலந்துக்கொள்ள முடியாமையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் நான் நேரடியாக தெரிவித்து விட்டேன். அதை ஏற்றுக்கொண்ட ஜனாதிபதி, அடுத்த வாரம் உசிதமான ஒரு தினத்தில் சந்திப்போம் என்று என்னிடம் நேரடியாக பதிலளித்து விட்டார் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

இதுபற்றி மனோ கணேசன் எம்பி மேலும் கூறியவை வருமாறு:-

வடக்கு, கிழக்கு தமிழ் எம்பிக்களை சந்தித்து ஈழத்தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகளுக்கு சாத்தியமான தீர்வுகளை நேர்மையாக தேடும் அதேவேளை, மலையகத் தமிழ் மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் பிரத்தியேகமாக அனைத்து மலையக எம்.பிக்களையும் சந்திக்கும்படி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் தமிழ் முற்போக்கு கூட்டணியே பலமுறை கோரிக்கை விடுத்திருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, தமிழ் முற்போக்கு கூட்டணிக்கு, அறிமுகமில்லாத ஒரு புதிய தலைவர் அல்லர். அத்துடன் இன்றைய ஒரே நாள் சந்திப்பில் மலையகத்தின் 200 வருட பிரச்சினைகளும் தீர்வுக்கு வந்து விடும் என்றும் எவரும் விளையாட்டாகக் கூட எதிர்பார்க்க முடியாது. ஆகவே தவிர்க்க முடியாத காரணத்தால் இன்று நடைபெற இருந்த எமது சந்திப்பு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. இதை ஜனாதிபதியும் ஏற்றுக்கொண்டு விட்டார். அத்துடன் அந்த பிரச்சினை முடிந்தது.

நேற்று நாடாளுமன்றத்தில் நாம் கொண்டுவந்த மலையகம்-200 முழுநாள் விவாதத்தில் கலந்துக்கொண்ட எதிர்தரப்பு, ஆளுந்தரப்பு எம்பிக்கள் அனைவரும் மலையக மக்களுக்கு நியாயம் வழங்கப்பட வேண்டும் என மிக உறுதியாக கருத்து தெரிவித்துள்ளனர். இது ஒரு மிகச் சாதகமான சூழலையும், புதிய பல எதிர்பார்ப்புகளையும் உருவாகியுள்ளது.

ஆகவே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் பரந்துப்பட்ட நிகழ்ச்சி நிரல் கொண்ட கலந்துரையாடலை நடத்தவே நாம் விரும்புகிறோம். மலையகத்தில் வீடு கட்டி வாழவும், வாழ்வாதார தொழிலுக்குமான காணி உரிமை, பெருந்தோட்ட குடியிருப்புகளை அரச பொதுநிர்வாக கட்டமைப்புக்குள் கொண்டு வருவது, இந்திய அரசு உறுதியளித்துள்ள இலங்கை ரூ. 300 கோடி நன்கொடை பயன்பாட்டு திட்டம், நிலவரம்பற்ற சமூக சபை என்ற மலையக மக்களுக்கான அதிகார பகிர்வு, பெருந்தோட்ட நிறுவனங்களுக்கும், அரசுக்கும் இடையிலான நீண்டகால குத்தகை ஒப்பந்தம் மீளாய்வு ஆகியவை பற்றி பேச கூட்டணி விரும்புகிறது. இதுபற்றி நாம் ஜனாதிபதிக்கு எழுத்து மூலமாக அறிவிக்க உள்ளோம்.

அந்த அதிகாரபூர்வ கலந்துரையாடலில், அனைத்து மலையக எம்பிக்கள், கட்சிகள் கலந்து கொள்வார்கள் என நாம் எதிர்பார்க்கின்றோம். மற்றபடி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகள், எம்.பிகள் ஜனாதிபதியை பிரத்தியேகமாக சந்திப்பது சர்வகட்சி மாநாடு அல்ல. அது அது எமக்கு தொடர்பற்ற அரசாங்க உள்விவகாரம்.

---

**கொழும்பில்...**

காயமடைந்த நபர் களுபோவில கொழும்பு தெற்கு போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

---

**கச்சதீவை...**

விமர்சித்தார்.

இந்தியாவின் ராமேஸ்வரம் மற்றும் இலங்கைக்கு இடையில் அமைந்துள்ள ஒரு தீவுதான் கச்சதீவு.

பாரம்பரியமாக இலங்கை மற்றும் இந்தியக் கடற்றொழிலாளர்களால் இந்தத் தீவு பயன்படுத்தப்பட்டு வருவதும் வழக்கம்.

1974இல்மேற்கொள்ளப்பட்ட"இந்தோ-இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின்" கீழ் கச்சதீவை இலங்கைப் பிரதேசமாக அப்போதைய பிரதமர் இந்திரா காந்தி ஏற்றுக்கொண்டார்.

கச்சதீவை இந்தியாவுக்கு கொண்டு வர வலியுறுத்தி தமிழக தி.மு.க. அரசு தொடர்ந்து கடிதம் எழுதி வருகிறது. ஆனாக் அதனைச் சாத்தியப்பாடற்றதாக மாற்றியது காங்கிரஸ் அரசுதான் - என்றார் பிரதமர்.

"கச்சதீவு தமிழ்நாட்டுக்கும் இலங்கைக்கும் இடையே உள்ள ஒரு தீவு. யார் அதை வேறு நாட்டுக்கு கொடுத்தார்கள்?, இந்திரா காந்தியின் தலைமையில் தானே நடந்தது" - என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## ஜனநாயக உரிமை மேம்படட்டும்

இனப் பூசல்கள், உள்நாட்டு யுத்தங்கள் போன்ற வற்றினால் பாதிக்கப்பட்ட இடங்கள், நாடுகள், பிரதே சங்களில் மீள் நல்லிணக்கம் ஏற்பட வேண்டுமானால், சில அடிப்படைத் தேவைப்பாடுகள் - கோட்பாடு கள் - கட்டாயம் பூர்த்தி செய்யப்பட வேண்டும்.

இந்தப் பூசல்கள், பிணக்குகளினால் தமது தாயகப் பூமியில் இருந்து இடம்பெயர வைக்கப்பட்ட வர்கள் தத்தமது பூர்வீக இடங்களுக்கு மீள்வதற்கு வழி செய்யப்பட வேண்டும். அதற்கான, சந்தர்ப்ப சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். மீள திரும்புவதற்கான உரிமை (Right to return) மிகவும் அடிப்படையானது.

இந்த உரிமை உள்நாட்டில் இடம்பெயர்ந்த வர்களுக்கு மட்டுமல்ல, வெளிநாடுகளுக்கு புலம் பெயர்ந்தவர்களுக்கும் வழங்கப்பட வேண்டும். அது மட்டுமல்ல. நல்லிணக்கம் மற்றும் சமரசத் தீர்வுகளுக் கான முயற்சிகளில் வெளிநாடுகளுக்கு இடம் பெயர்ந்தோரும் பிரதான பங்காளிகள் என்பதும் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். இணக்கத்திற்கான - தீர்வுக்கான - முயற்சிகளில் ஆதிக்கம் செலுத்தும் ஒரு தரப்பாக அவர்களது கருத்து நிலைப்பாடும் உள்வாங்கப்பட வேண்டும்.

மொத்தத்தில் இந்தத் தீர்வு எத்தனங்களில் அவர்க ளும் பங்காளிகளாக்கப்படுவது கட்டாயமானதும் நீதியானதுமாகும்.

ஆனால், இவ்விடயங்களில் புலம்பெயர்ந்தோர் வெறும் பார்வையாளர்களாகப் பேணப்படும் பொருத்த மற்ற - தவறான- நிலைமையே இங்கே நீடிக்கின்றது. இது மாற்றியமைக்கப்பட வேண்டும்.

இலங்கையின் பிரதான தேர்தல்களில் வெளி நாடுகளில் வதியும் இலங்கையரும் வாக்களிக்கக் கூடிய ஒரு திட்டம் குறித்து இப்போது பேசப்படுகின்றது.

அந்நிலைமை ஏற்படுமானால் இதுவரை பார்வை யாளர்கள் போல ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கும் நமது புலம்பெயர் உறவுகள் நமது விடயங்களில் பங்காளி களாகப் பங்களிக்க கூடிய வாய்ப்புக் கிட்டும்.

புலம்பெயர்ந்த நமது தமிழ் உறவுகளில் கணிச மானோர் தாம் நிலை கொண்டுள்ள நாடுகளின் பிரஜைகளாகத் தங்களை மாற்றிக் கொண்டாலும், அவர்களது நினைவும் வாழ்வும் என்றும் தாயகத்தை - பூர்வீகத்தை - ஒட்டியே அமைந்திருக்கின்றது என்பது மறுக்கக்கூடியதல்ல.

தத்தமது புலம்பெயர் நாடுகளில் இருந்தபடி தமது தாயகத்தின் ஜனநாயகக் கடமைகளில் பங்கு கொள் ளும் வாய்ப்பு வெளிநாடுகளில் இருப்போருக்கு வழங்கப்படுமானால், புலம்பெயர் தமிழ்ச் சமூகம் அதில் அதிக ஈடுபாடு காட்டும் என்பது நிச்சயம். அந்தந்த நாடுகளில், அவற்றின் பிரஜா உரிமை பெற்ற நம்மவர்கள் கூட, மீண்டும் இரட்டைப் பிரஜாவுரிமை பெற்று, தேர்தல்களில், அதன் மூலம் நமது நாட்டின் ஜனநாயகக் கடமைகளில், ஈடுபாடு காட்டும் சூழல் உருவாகும்.

அந்த வகையில் வெளிநாட்டில் இருக்கும் இலங்கை யர் இங்குள்ள தேர்தல்களில் வாக்களிப்பதற்கு சந் தர்ப்பம் வழங்கும் உத்தேசத் திட்டம் விரைந்து நடை முறைக்கு வருமானால் இலங்கையைப் பூர்வீக மாகக் கொண்ட மக்களின் உலகளாவிய ஒன்றிப்பு மேலும் சாத்தியமாகும்.

# சுட்டாறிய தண்ணீரை குடிக்கப் பயன்படுத்துக!

### அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் தெரிவிப்பு

நாடளாவிய ரீதியில் நிலவும் வறட்சி காரணமாக நீர் நிலைகள் மாசடைந்து வருகின்றன. இந்த நிலையில் சுட்டாறிய தண்ணீரைக் குடிப்பதற்குப் பயன்படுத்துமாறும் இதன் மூலம் நோய்களைத் தவிர்க்க முடியும் என்றும் அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் உதவி செயலாளர் சம்மில் விஜேசிங்க தெரிவித்துள்ளார்.

வயிற்றுப்போக்கு, வாந்தி பேதி போன்ற நோய்கள் பரவும் அபாயம் தற்போது அதிகரித்துக் காணப்படும் நிலை யில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இந்த வறண்ட பருவத்தில், சாதாரண நீர் நிலைகள் வறண்டு கிடப்பதால், தண்ணீர் விநியோகம் மக்களுக்கு கடுமையான பிரச்சினையாக உள்ளது.

குறிப்பாக கிராமப் பகுதிகள் மற்றும் தொலை தூரப் பகுதிகளுக்குச் செல்லும் போது இந்த நிலை தீவிரமான சூழ்நிலையாக மாறி வருகிறது.

கிணறுகள், ஆழ் குழாய் கிணறுகள் போன்றவை வறண்டு கிடப்பதால், குடி தண்ணீர் கிடைக்காமல் மக்கள் மிகவும் சிரமப்படுகின்றனர். அதனால் கிடைக்கும் நீர் ஆதாரங்க ளில் இருந்து தண்ணீரை பெற முயற்சிக்கின்றனர். அந்த நீர் ஆதாரங்களில் சில அசுத்தங்கள் மற்றும் கிருமிகள் இருக்க வாய்ப்பு உள்ளது.

எனவே மக்கள் இந்த நீர் ஆதாரங்களில் இருந்து வரும் நீரை எதிர்காலத்தில் பயன்படுத்தும் போது வயிற் றுப்போக்கு, வாந்திபேதி போன்ற நோய்கள் உருவாகும் அபாயம் உள்ளது.

ஆகவே, நீங்கள் குடிக்கும் நீர் ஆதாரம் சுத்தமாக இல்லை என்பதில் உங்களுக்கு ஏதேனும் சந்தேகம் இருந்தால், குறைந்தபட்சம் தண்ணீரைக் கொதிக்க வைத்து குடிக்கப் பயன்படுத்துங்கள் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# ஐக்கிய மக்கள் சக்தியின் சஜித் திங்கட்கிழமை சம்மாந்துறைக்கு



(அ.அஸ்வர்)

'சக்வல (பிரபஞ்சம்)' எனும் வேலைத் திட்டத்தின்கீழ் 75 ஆவது பேரூந்து கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொள்வ தற்காக ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவரும் எதிர்கட்சித் தலைவருமான சஜித் பிரேதசா எதிர்வரும் திங்கட்கிழமை (14) சம்மாந்துறைக்கு வருகைதரவுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சம்மாந்துறை தொகுதி அமைப் பாளர் எம்.ஏ.ஹஸனலியால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள நிகழ்வில் கலந்துகொள்ளவதற்காக வருகைதரும் எதிர்க் கட்சித் தலைவர் தலைமையிலான குழுவினர் சம்மாந் துறை ஹிஜ்ரா சந்தியில் வரவேற்கப்படவுள்ளனர். அங் கிருந்து அன்பளிப்பாக வழங்கப்படவுள்ள பேரூந்தின் மூலம் சம்மாந்துறை தேசியப் பாடசாலை வளாகத்தை வந்தடைந்து அங்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பேரூந்து கையளிக்கும் நிகழ்வில் பங்கேற்கவுள்ளார்.

எதிர்கட்சித் தலைவரின் சம்மாந்துறை விஜயத்தை முன்னிட்டு அன்றைய தினம் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன என்று சம்மாந்துறை தொகுதி ஐக் கிய மக்கள் சக்தி அமைப்பாளர் ஹஸனலி தெரிவித்துள் ளார்.

# நூலக முகாமைத்துவ பயிற்சி நெறி





(கே. எ. ஹமீட் )

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஏற்பாட்டில் நூலக ஊழியர்களுக்கான நூலக முகாமைத்துவம் எனும் தலைப்பிலான ஒரு நாள் பயிற்சி நெறி அட்டாளைச்சேனை பொது நூலகத்தின் நூலகர் ஏ.சீ.அன்வர் சதாத் தலைமையில் ஒலுவில் பொது நூலக மண்டபத்தில் நடைபெற்றது.

இப்பயிற்சி நெறியில் விரிவுரையாளர்களாக சனசமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் என்.எம் சாஹிர், கிழக்குப் பல்கலைக் கழகத்தின் சிரேஷ்ட உதவி நூலகர் வி.பிரசாந்தன், நூலகர் அன்வர் சதாத் ஆகியோர் கலந்து கொண்டு விரிவுரைகளை நிகழ்த்தினர்.

நீண்டகாலத்தின் பின்னர் இவ்வாறான பயிற்சி நெறியை ஏற்பாடு செய்து சிறப்பாக ஒழுங்கமைத்த அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கும், நூலகர் அன்வர் சதாதுக்கும் இப் பயிற்சியில் கலந்து கொண்ட நூலக ஊழியர்கள் தமது நன்றியைத் தெரிவித்துக் கொண்டனர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் நிர்வாகத்தின் கீழ் செயற்படும் அட்டாளைச்சேனை பொது நூலகம், பாலமுனை பொது நூலகம், ஒலுவில் பொது நூலகம், கோணாவத்தை பொது நூலகம், ஆலம்குளம் பொது நூலகம் ஆகியவற்றில் கடமையாற்றுகின்ற நூலகர்களும், நூலக ஊழியர்களும் இப்பயிற்சி நெறியில் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

# அக்கரைப்பற்று இராம கிருஷ்ணா பாடசாலைக்கு நீதிபதி விஜயம்





(வடிவேல் டினேஸ்)

அக்கரைப்பற்று ஸ்ரீ இராம கிருஷ்ணா தேசிய பாடசாலைக்கு அக்கரைப்பற்று நீதிமன்ற நீதிபதி ஜனாப் எம்.எச்.எம்.ஹம்சா விஜயம் ஒன்றை மேற்கொண்டிருந்தார்.

நீதிபதியின் பிறந்த தின ஞாபகார்த்தமாக நேற்று இந்த விஜயம் அமைந்திருந்தது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது மரக்கன்றுகள் அவரால் நட்டு வைக்கப்பட்டன. இதனை தொடர்ந்து மாணவர்கள் மத்தியில் போதை ஒழிப்பு, பொருத்தமாக சீருடை அணிவதன் முக்கியத்துவம், பொருத்தமான சிகையலங்காரம், ஆசிரியத்துவத்தை மாணவர்கள் மதித்தல் மற்றும் ஒழுக்கம் சார்ந்த விடயங்கள் தொடர்பில் மாணவர் மத்தியில் உரையாற்றினார்.

இதன்போது பாடசாலை அதிபர் ஜே.ஆர்.டேவிட் அமிர்தலிங்கம், பிரதி அதிபர் உள்ளிட்ட பாடசாலை மாணவர்களும் ஆசிரியர்களும் கலந்து கொண்டனர் .

அத்துடன் பாடசாலை சம்பவத் திரட்டுப் புத்தகத்திலும் இந்த விஜயம் தொடர்பில் நீதிபதி குறிப்பிட்டிருந்தார்.

# குருநாகலில் சிறகுகள் திசையறி செயற்றிட்டம்

சிறகுகள் அமைய குரு தளம் பிராந்தியத்தின் (குருநாகல், புத்தளம்) ஏற்பாட்டில் கல்விப் பொதுத்தராதர சாதாரண தரப்பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களுக்கான திசைமுகப்படுத்தல் நிகழ்வு எதிர்வரும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை குருநாகல் ரமுக்கந்தன அல் – ஹுதா முஸ்லிம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

திசையறி செயற்றிட்டமனாது பாடநூல் கல்வியைத் தாண்டிய, எதிர்கால இலக்குகளை இனங்காண்பதற்கானவழிகாட்டலாகும். குறித்தசெயற்றிட்டம் அமையத்தின் ஊடாக இணைய வழியில் ஆரம்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# திருமலையில் பாடசாலை மாணவர்களின் விவாதம்

திருகோணமலை கீரோஸ் லியோ கழகத்தின் ஏற்பாட்டில் சொற்சிலம்பம் 2023 விவாதப் போட்டி எதிர்வரும் 13 ஆம் திகதி காலை 8 மணி முதல் திருகோணமலை புனித சவேரியார் மகா வித்தியாலயத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலைகளுக்கிடையிலான இந்தப் போட்டியில் மலையகம், அரசியல், கல்வி, பண்பாடு தொடர்பிலான தலைப்புக்களில் விவாதம் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# மண்டூர் முருகனின் திருவிழா ஆரம்பம்

**(வடிவேல் டினேஸ்)**

முருகப் பெருமானின் வாகூர மலையை உடைத்தெறிந்து கிழக்கில் மூன்று பகுதிகளாக பதிந்த வேலா னது மண்டூர் பதியிலும் தில்லை மரத்தில் தங்கிய வரலாற்றை கொண்ட மண்டூர் முருகனின் திரு விழா நேற்று (10) கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது.

மண்டூர் முருகன் ஆலயத்தின் திருவிழா எதிர்வரும் 30 ஆம் திகதி தீர்த்தத் திருவிழாவுடன் நிறைவு பெறும்.

# மாளிகைக்காடு ஜனாஸா நலன்புரி அமைப்பின் புதிய நிர்வாகிகள்



அம்பாறை மாவட்டம், மாளிகைக்காடு பிரதேசத்தில் இயங்கி வரும் ஜனாஸா நலன்புரி அமைப்பின் வருடாந்த பொதுக் கூட்டம் மாளிகைக்காடு சனசமூக நூலகக் கட்டடத் தில் அதன் தலைவர் ஏ.எல். இம்தியாஸ் தலைமையில் வியாழக்கிழமை (09) நடைபெற்றது.

இதன்போது அமைப்புக்கான புதிய நிர்வாகத் தெரிவும் இடம்பெற்றது.

தலைவராக ஏ.எல்.எம்.அனுவர், செயலாளராக எம்.ஏ.எஸ். சுல்பிகார், பொருளாளராக ஏ.எல்.எம்.பாயிஸ், உப தலை வராக ஏ.ஆர்.எம்.ராபி, உப செயலாளராக ஏ.எல்.எம்.பாஹிம், கணக்குப் பரிசோதகராக எம்.ஏ.இக்பால் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

அத்துடன் அமைப்பின் அலுவலகப் பொறுப்பாளர்களாக ஏ.எம்.பஸ்மீர், ஜே.எம்.பாஸீத், நிதிப் பொறுப்பாளராக எம்.ஏ.இக்பால், ஊடகப் பொறுப்பாளர்களாக ஏ.ஆர்.எம். ராபி, என்.எம்.றுஸ்தி, ஜே.எம். ஹஸான் ஆகியோரும் தெரிவாகியுள்ளனர்.

அமைப்பாளர்களாக எப்.எம். ரகுபீ, ஏ.எம்.தஸ்மீன், எம். எம். நபார், ஆகியோரும் போஷகராக யூ.எம்.றியாசும் தெரிவு செய்யப்பட்டனர்.

# திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுங்கள்

## பெரிய நீலாவணை பொது மக்களுக்கு பொலிஸார் அறிவுறுத்து



**(பாறுக் ஷிஹான்)**

பெரிய நீலாவணை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிரதே சங்களில் அண்மைக் காலமாக பெறுமதி வாய்ந்த நகை திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுவதால் பொது மக்கள் அவதானமாக இருக்குமாறு பெரியநீலாவணை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அறிவித்துள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார ஸ்திரத்தன்மை உட்பட இதர பிரச்சினை உருவாகியுள்ள நிலையில் மக்கள் மத்தியில் சிலர் குழப்பங்களை வீணாக ஏற் படுத்தி வருகின்றனர்.

இவ்வாறான திருட்டுச் சம்பவத்தில் குழுக்களாகவும் தனியாகவும் செயற்பட்டு வருகின்றனர்.

அண்மையில் கூட 8 பவுண் பெறுமதியுள்ள தாலிக் கொடி உள்ளிட்ட பெறுமதியான நகைகள் தொடர்ச்சியாக பெரியநீலாவணை பொலிஸ் பிரிவில் திருடப்பட்டுள்ளன. பல்வேறு முறைப்பாடுகள் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ளன.

எனவே வீதி ஓரங்கள் பொது இடங்கள் மற்றும் வியா பார நிலையங்களில் சந்தேகத்துக்கிடமாக இரவு பகல் வேளை களில் யாராவது நடமாடினால் உடனடியாகப் பொலிஸா ருக்கு அறியத் தருமாறும் கேட்டுள்ளனர்.

பாண்டிருப்பு, மருதமுனை, பெரிய நீலாவணை ஆகிய பிரதேசங்களில் நகைகள் மோட்டார் சைக்கிள்கள் திருட்டுச் சம்பவங்கள் அதிகரித்து காணப்படுகிறமை தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் அதிகமான முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை சம்பந்தப்பட்ட சந்தேக நபர்களை உடன டியாக கைது செய்வதற்கு பொலிஸ் நிலையத்தில் முறைப் பாடு செய்யும் பட்சத்தில் பெரியநீலாவணை பொலிஸ் நிலையம் துரித நடவடிக்கை எடுக்கும் என்றும் தெரி விக்கப்பட்டுள்ளது.

# யாழ். முத்துத்தம்பி வித்தியாலய சாதனை மாணவி கௌரவிப்பு





தமிழ்த்தின போட்டியில் தேசிய மட்டத்தில் சாதனை படைத்த யாழ். முத்துத்தம்பி மகா வித்தியாலய மாணவியை கௌரவிக்கும் நிகழ்வு நேற்று (10) நடைபெற்றது.

அகில இலங்கை பாடசாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற தமிழ்த்தின இலக்கணப் போட்டியில் தேசிய மட்டத்தில் முத்துத்தம்பி மகா வித்தியாலயம் மாணவி வெற்றி பெற்று சாதனை படைத்திருந்தார்.

சாதனை மாணவியைக் கௌரவிக்கும் நிகழ்வு பாடசாலை அதிபர் இ.சுபதீஸ்வரன் தலைமையில் பாடசாலை பிரதான மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் அம்பலவாணர் சிவபாலசுந்தரனும் சிறப்பு விருந்தினராக வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் யோன் குயின்ரஸும் கலந்து கொண்டு மாணவிக்குப் பொன்னாடை போர்த்தி தங்கப் பதக்கங்கள் அணிவித்துக் கௌரவித்தனர்.

இந்த நிகழ்வில் விசேட அம்சமாக சாதனை படைத்த மாணவியுடன் மாணவிக்கு கற்பித்த ஆசிரியரும் குறிப்பாக மாணவியின் தாயாரும் விருந்தினர்களுடன் மாலை அணிவிக்கப்பட்டு மங்கள வாத்தியங்களுடன் வரவேற்கப்பட்டனர்.

## தென் கிழக்கு கரையோர பிரதேச

# தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கிழக்கு மாகாண ஆளுநருடன் சந்திப்பு

(கே. எ. ஹமீட் )



தென்கிழக்கு கரையோர தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கம் கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமானை கிழக்கு மாகாண ஆளுனரின் திருகோணாமலை அலுவலகத்தில் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பில் கிழக்கு மாகாண முன்னாள் அமைச்சர் எம்.எஸ். உதுமாலெப்பை, கிழக்கு மாகாண ஆளுனரின் பிரத்தியேக செயலாளர் அனில், கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ எம் எச் உதயகுமார, கிழக்கு மாகாண ஆளுனர் அலுவலக திட்டப்பணிப்பாளர் பாயிஸ்,தென் கிழக்கு கரையோர பிரதேச தனியார் பஸ் உரிமையாளர் சங்க தலைவர் சிமாஸ் மௌலானா, செயலாளர் எம்.எஸ்.பைறுஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந் நிகழ்வில் பின்வரும் கோரிக்கைகள் ஆளுனரிடம் முன்வைக்கப்பட்டன.

கல்முனை கதுருவெல வீதியில் சேவையில் ஈடுபட்டு வந்த தனியார் பஸ் ஒன்று 2023.07.09 ஆம் திகதி மன்னம்பிட்டியில் விபத்தை ஏற்படுத்தி அப்பாவி பொதுமக்கள் 11 பேர் பலியானதுடன் 40பயணிகளுக்கு பலத்த காயம் ஏற்பட்டது. இது தொடர்பில் கிழக்கு மாகாண ஆளுனரால் விஷேட கொமிட்டு நியமிக்கப்பட்டு இது தொடர்பான உண்மைத்தன்மை வெளியிடுதல்.

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் முறையற்ற முறையில் வழங்கப்பட்ட 13 சொகுசு பஸ்களுக்கான அனுமதிப் பத்திரங்கள் கல்முனை மேல் நீதி மன்றத்தால் இரத்து செய்யப்பட்டது. இந்த விடயமாக கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் கொழும்பு மேன்முறையிட்டு நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளமை தொடர்பான விடயம்.

கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் இடம்பெற்று வந்த நிதி மோசடி மற்றும் ஊழல்கள் சம்மந்தமான. ஆதாரங்கள் வழங்கியிருந்தும் நடவடிக்கை எடுக்காமை.

கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையால் முறையற்ற முறையில் வழங்கப்பட்ட பஸ் அனுமதிபத்திரங்கள். முன்னாள் கிழக்கு மாகாண ஆளுனரால் இடைநிறுத்தப்பட்ட பஸ்களின் அனுமதிபத்திரங்களை கடந்த 2023.07.23ம் திகதி அன்று தவறான முறையில் நீடித்து கொடுக்கப்பட்டமை.

கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையில் தொடர்ச்சியாக இடம் பெற்று வரும் ஊழல்,மோசடிகளுக்கு எதிராக நடவடிக்கை மேற்கொள்ளுமாறு தென் கிழக்கு கரையோர பிரதேச தனியார் பஸ் சங்கம் கோரிக்கை விடுப்பதால் தென்கிழக்கு கரையோர பிரதேச தனியார் பஸ் சங்கத்தை கிழக்கு மாகாண வீதிப்பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் அதிகாரிகளால் தொடர்ச்சியாக பழிவாங்கும் செயல்பாடுகள் தொடர்பாக நடவடிக்கை மேற்கொள்ளல்.

இந்த விடயங்களை கேட்டறிந்து கொண்ட கிழக்கு மாகாண ஆளுனர் செந்தில் தொண்டமான் ,

கிழக்கு மாகாண பிரதம செயலாளர், கிழக்கு மாகாண முதலமைச்சின் செயலாளர், கிழக்கு மாகாண வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகார சபையின் தலைவர் ஆகியோருடன் கலந்துரையாடி நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

# இந்தியாவின் பிரிவினைக்கு காங்கிரஸ் கட்சியே காரணம்!

## - பிரதமர் நரேந்திர மோடி குற்றச்சாட்டு

இந்தியாவின் பிரிவினைக்கு காங்கிரஸே காரணம் என இந்திய பிரதமர் நரேந்திர மோடி குற்றம் சாட்டியுள்ளார்.

மக்களவையில் தமது அரசாங்கம் மீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லா பிரேரணை தொடர்பில் பதிலளித்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன், 1974 ஆம் ஆண்டு கச்சத்தீவை இலங்கைக்கு இந்திரா காந்தி அரசாங்கமே வழங்கியது என்று பிரதமர் நரேந்திர மோடி குறிப்பிட்டுள்ளார்.

இந்தியா மற்றும் இலங்கை இடையே அமைந்துள்ள கச்சத்தீவு, பாரம்பரியமாக இலங்கை மற்றும் இந்திய மீனவர்களால் பயன்படுத்தப்பட்டது.

1974 ஆம் ஆண்டு அப்போதைய பிரதமராக இருந்த இந்திரா காந்தி இந்தோ - இலங்கை கடல்சார் ஒப்பந்தத்தின்' கீழ் கச்சத்தீவை இலங்கையின் பகுதியாக ஏற்றுக்கொண்டார்.



எனவே, காங்கிரஸ்காரர்கள் அரசியலுக்காக இந்தியாவை மூன்றாகப் பிரித்தார்கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்தநிலையில் கச்சத்தீவை இந்தியாவிற்கு மீண்டும் பெற்றுக் கொள்வது தொடர்பில், தமிழகத்தில் திராவிட முன்னேற்ற கழக அரசாங்கம் தொடர்ந்தும் கடிதம் எழுதி வருகிறது என்றும் இந்திய பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

# தமிழக த்தில் 16 ஆயிரம் கிலோ போதைப்பொருட்கள் அழிப்பு!

## - முதல்வர் ஸ்டாலின் பெருமிதம்

தமிழக வரலாற்றில் இதுவரை இல்லாத அளவுக்கு 16 ஆயிரம் கிலோ போதைப் பொருள்கள் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டுள்ளன என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை கலைவாணர் அரங்கில் இன்று, பொலிஸார் சார்பில் 'போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு விழா நடைபெற்றது.

இந்த விழாவில் கலந்துகொண்டு தஉரையாற்றும்போதே மிழக முதல்வர் ஸ்டாலின் இவ்வாறு தெரிவித்துள்ளார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

போதைப் பொருட்கள் இல்லாத தமிழ்நாடு, என்ற நோக்கத்தோடு கடந்த ஆண்டு இந்தத் திட்டம் தமிழ்நாடு அரசால் தொடங்கப்பட்டது. போதைப் பொருள்கள் புழக்கத்தை தடுக்க வேண்டும். போதைப்பொருள் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுகிறவர்கள் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டும். போதைப்பொருள் பாவனையால் ஏற்படுகின்ற தீமைகளை பற்றி இளம் தலைமுறையினர் இடையே விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். இதுதான் இந்தத் திட்டத்தினுடைய நோக்கங்கள்.

அதன் காரணமாக, தமிழகத்தில் இத்தகைய குற்றச்சம்பவங்கள் வெகுவாக குறைந்து கொண்டு வருகிறன. அதற்காக, முழுவதுமாக தடுத்துவிட்டோம் என்று சொல்ல வரவில்லை. குறைந்து கொண்டு வருகிறது என்று தான் நான் சொல்கிறேன். இந்தளவுக்கு குறைய, அக்கறையுடனும், பொறுப்புடனும் செயல்பட்டு வருகின்ற பொலிஸ் அதிகாரிகள் எல்லோருக்கும் என்னுடைய நன்றியை முதலில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன். இந்த ஆர்வமும், அக்கறையும் குறையாமல் செயல்பட்டு, முற்றிலுமாக போதைப் பொருட்கள் நடமாட்டத்தை தடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

போதைப் பழக்கத்தால், சீரழிந்து இருக்கின்ற மாணவர்களையும், இளைஞர்களையும் மீட்டெடுக்க வேண்டிய பெரும்பணி தமிழக அரசுக்கு இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் நம்பிக்கைக்கேற்ப இந்த விடயத்தில், தமிழக அரசு தொடர்ந்து செயல்பட்டு வந்து கொண்டிருக்கிறது என்று தெரிவித்துள்ளார்.

# பட்டாசு தொழில் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு!

பட்டாசு தொழில் பிரச்சனைக்கு இந்த ஆண்டில் மத்திய அரசு நிரந்தர தீர்வை ஏற்படுத்தும் என சிவகாசியில் பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. மாநிலத் தலைவர் அண்ணா மலையின் 'என் மண் என் மக்கள் ' யாத்திரையில் 12 ஆவது நாளான நேற்று இரவு சிவகாசியில் நடைபயணம் மேற்கொண்டார்.

இதன்போது சிவகாசி பேருந்து நிலையம் முன்பு அண்ணாமலை உரையாற்றுகையில், இந்தியாவின் ஒட்டு மொத்த உற்பத்தியில் 90 சதவீதம் பட்டாசும், 70 சதவீதம் தீப்பெட்டியும் சிவகாசியில் உற்பத்தி செய்யப்படுகிறது.

உலகில் மிகப்பெரிய அளவிலான அச்சுத் தொழிலும் சிவகாசி நடைபெற்று வருகிறது. எந்த ஒரு நகரிலும் இது போன்ற தொழில் வளர்ச்சி இல்லை. 2014 நாடாளுமன்ற தேர்தல் பிரசாரத்தின் போது ஈரோட்டில் நடந்த பொதுக்கூட்டத்தில், சீன பட்டாசுகளால் சிவகாசி அழிந்து கொண்டிருக்கிறது என மோடி பேசினார். மோடி பிரதமராக பதவியேற்ற பின் பட்டாசு பிரச்சினைகளை தீர்க்க பல்வேறு நவடிக்கைகளை எடுத்து வருகிறார் என்று தெரிவித்துள்ளார்.

# உக்ரைன் ட்ரோன் தாக்குதல்: இடைமறித்து அழித்த ரஷ்யா!

ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் உக்ரைன் மீண்டும் இரு ஆளில்லா விமானங்களை ஏவியிருந்தது எனவும் அவை இடைமறித்து அழிக்கப் பட்டுள்ளன என ரஷ்யா தெரிவித்துள்ளது.

அவற்றில் ஒன்று நகருக்கு தென்மேற்கே அமைந்துள்ள கலுகா பகுதியிலும், மற்றொரு ட்ரோன் மாஸ் கோவின் முக்கிய சுற்றுச் சாலைக்கு அருகிலும் அழிக்கப்பட்டது என தெரிவிக் கப்பட்டுள்ளது.

ரஷ்ய தலைநகர் மாஸ்கோவின் புகர் பகுதியில் அமைந்துள்ள தொழிற் சாலையொன்றில் நேற்று முன்தினம் வெடிவிபத்து ஏற்பட்டது.

உக்ரைனுடன் நடைபெற்று வரும் போரின் ஒரு பகுதியாக மாஸ்கோவில் அந்த நாட்டு ட்ரோன் மூலம் தாக்குதல் நடத்தி



வரும் நிலையில், இராணுவத்துக்குத் தேவையான பொருட்களை தயாரிக்கும் தொழிற்சாலையில் இந்த வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

# ஹவாய் காட்டுத் தீ ஒரு பேரழிவு: ஜனாதிபதி ஜோ பைடன் கவலை!



அமெரிக்காவின் ஹவாய் தீவுகளில் ஏற்பட்ட காட்டுத் தீயில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 53 ஆக அதிகரித்துள்ள நிலையில் இதனை ஒரு பேரழிவு என அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் அறிவித்துள்ளார். மீட்புப் பணியில் இராணுவம் ஈடுபடும் என்றும் தெரிவித் துள்ளார்.

அமெரிக்காவின் தீவு மாநிலமான ஹவாய் தீவுகள், முக்கிய நிலப்பகுதியில் இருந்து மேற்கே 2 ஆயிரம் மைல் தொலைவில் பசிபிக் கடலில் அமைந்துள்ளது. இதில் அமைந்துள்ள இரண்டாவது மிகப்பெரிய தீவு மாய் ஆகும். இத்தீவின் சில இடங்களில் கடந்த சில தினங்களுக்கு முன்னர் காட்டுத் தீ பற்றியது. அருகில் உள்ள புகழ்பெற்ற சுற்றுலா தலமான லைஹானா நகருக் குள் தீ மிக வேகமாகப் பரவியது. இதில் நூற்றுக்கும் மேற்பட்ட கட்டிடங்கள், வாகனங்கள் தீப்பற்றி எரிந்தன.

தீயில் இருந்து தப்பிக்க பலர் கடலில் குதித்தனர். தீ கட்டுக்கடங்காமல் எரிந்ததில் சுமார் 271 கட்டடங்கள் சேதம் அடைந்தன. இதில் லைஹானா நகரம் முற்றிலும் உருக்குலைந்தது. தீயில் சிக்கி உயிரிழந்தோரின் எண்ணிக்கை 53 என அதிகரித்துள்ளது. மேலும், பலர் தீக்காயம் அடைந்தனர். சிலருக்கு மூச்சுத் திணறல் ஏற்பட்டதாகவும் தகவல். அவர்களுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் ஹவாய் தீவுகளில் ஏற்பட்ட காட்டுத் தீயை பேரழிவு என அறிவித்துள்ளார். மீட்பு பணியில் இராணுவம் ஈடுபடும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உரிய நிவார ணம் வழங்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# துருக்கியில் நிலநடுக்கம்!

துருக்கியின் தென் பகுதியில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது என அமெரிக்க புவியியல் மையம் தெரிவித்துள்ளது.

இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவில் 5.3 ஆக பதிவாகியுள்ள நிலையில் 23 பேர் படுகாயம் அடைந்துள்ளனர்.

இதேவேளை, கடந்த பிப்ரவரி மாதம் துருக்கியில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 50 ஆயிரத்துக்கும் மேற்பட் டோர் உர்யிழந்தனர் என்பது குறிப்பிடத் தக்கது.


## மன்னர் சார்ள்சை சிறப்பிக்கும் நாணயம்!




மன்னர் சார்ள்ஸின் முடிசூட்டை குறிக்கும் வகையில் சிறப்பு நாணயம் வெளியிடப்பட்டுள்ளது.

மன்னரின் உருவம் பொறிக்கப்பட்ட 50 பவுன்ஸ் இங்கிலாந்து நாணயங் களை அதிகாரபூர்வமாக தயாரிக்கும் 'தி ரோயல் மின்ட்' நிறுவனம் இத்த கவலை வெளியிட்டுள்ளது.

இதேவேளை, இந்த நாணயம் உடனடியாக புழக்கத்துக்கு வரும் எனவும் அந்த நிறுவனம் தெரிவித் துள்ளது.


கசூரினா
படகுச் சேவை
சேவைகள்
01. மூன்று கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பார்த்தல்
02. பவளப் பாறைகள் சுற்றிப் பார்த்தல்
03. வெளிச்சவீட்டு கடற்பகுதியைச் சுற்றிப் பார்த்தல்
04. பருத்தித்தீவு சென்று வருதல்
05. நயினாதீவு சென்று வருதல்
06. காரைநகர் கடற்கோட்டையைச் சுற்றிப் பார்த்தல்
காரைநகர் கசூரினா கடலில் கண்ணாடி இழைப்படகில் பயணித்தவாறே கடலின் அடியில் பவளப்பாறைகள் மற்றும் மீன் இனங்களை கண்டு ரசிக்கக் கூடிய விதத்தில் கண்ணாடி பொருத்தப்பட்ட படகுகள் இன்னும் சில வாரங்களில் எம்மால் சேவையில் ஈடுபடுத்தப்படவிருக்கின்றன.
கசூரினா படகுச்சேவை தொடர்புகளுக்கு : 077 078 3949